## இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2015

---

இலங்கை காணி மீட்பு மற்றம் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான ஒருங்கிணைந்த வருமானக் கூற்று, ஒருங்கிணைந்த மூலதன மாற்றக் கூற்று மற்றும் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பா 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க காணி மீட்பு மற்றும் அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 17(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தினைத் தவிர, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியினது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தபோதும், துணைக் கம்பனியினது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதன் உப துணைக் கம்பனியான எல்ஆர்டீசீ சேவைகள் (தனியார்) கம்பனியினது நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை. துணைக் கம்பனி சம்பந்தமான கூட்டுத்தாபனத்தின் உரித்து 80 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அதன் துணைக் கம்பனிகளது சட்டபூர்வ உரித்து 80 சதவீதமாக இருந்தபோதும், அந்நிலையைக் கருத்திற் கொள்ளாது துணைக் கம்பனிகளது சொத்துக்கள் பொறுப்புகள் மற்றும் வரிக்கு முன்னரான இலாபத்தின் மொத்தப் பெறுமதியையும் ஒருங்கிணைத்ததன் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் என்பன முறையே ரூபா 174.16 மில்லியன், ரூபா 129.78 மில்லியன், ரூபா 14.50 மில்லியனால் கூடிய பெறுமதிக் கணிப்புக்குள்ளாகியிருந்தன.

பின்வரும் அவதானிப்புகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் கணக்காய்வாளர்களால் அக்கம்பனியினது 2015

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 55.3 மில்லியன் மீதி தொடர்பாக இழப்பானது (Impairment) கணிப்பிடப்படாமை.

(ஆ) முன் கொண்டு வரப்பட்ட பெற வேண்டிய வருமான வரியாகிய ரூபா 12.2 மில்லியன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்து வருமானவரித் திரட்டுடன் (Income Tax Return) இணக்கமுறாததால் நிர்ணயிப்பு (Ascertained) வழங்கப்படாமை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 19.8 மில்லியன் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி தொடர்பான பிழையற்ற தன்மையைப் பரிசீலிப்பதற்கான மீதிகளது உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிராமை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு முரணாக ஒப்பந்த வருமானத்தைக் காசு அடிப்படையில் கணக்கிலிட்டமை.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - கூட்டுத்தாபனம்

---

### 2.3.1 தொடர்புடைய நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான காணி மீட்பு, அபிவிருத்தி தனியார் கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 33,726,073 மீதியானது கம்பனியினது புத்தகங்களின் பிரகாரம் ரூபா 14,878,689 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே, அக்கம்பனிக்கு ரூபா 15,263,813 கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளதாகக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எனினும், அக்கம்பனியினது கணக்குகளில் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற வேண்டிய எப் பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உப துணைக் கம்பனியான எல்ஆர்டீசீ சேவைகள் (தனியார்) கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனம் அறவிட வேண்டிய ரூபா 25,702,506 கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

---

கீழே காணப்படும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

---

(i) நியமத்தின் பிரகாரம், விரிவான வருமானக் கூற்றிலே காலப்பகுதிக்குரிய ஏனைய விரிவான வருமானச் சீராக்கல்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் இருக்க வேண்டுமாயினும், கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்கெனத் தயாரித்த விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானச் சீராக்கலோ அல்லது அவற்றுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்களோ இருக்கவில்லை.

(ii) நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் (Fair Value) சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபனம் ரூபா 980.38 மில்லியன் கிரயமுடைய சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது நியாயமான பெறுமதியை மதிப்பிட்டு அதனை நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் ரூபா 96.86 மில்லியன் பெறுமதியுடைய சொத்துக்களை வங்கிப் பிணை முறியாக வைத்திருந்தபோதும், பிணையாக வைக்கப்பட்ட நிலையான சொத்துக்களது பெறுமதி ரூபா 75 மில்லியன் மாத்திரமே என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க மானியத்தின் மூலம் நடைபெறும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அம்மானியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் நேரடிச் செலவினத்திற்குப் புறம்பாக கூட்டுத்தாபனம் மேந்தலைச் செலவினமாக ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதத்தை அறவிட்டிருந்தது. இவ்வறவீட்டை வருமானமாக விரிவான வருமானக் கூற்றில் காட்டுவதற்குப் பதிலாக ரூபா 260.90 மில்லியன் செலவினத்திலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 11**

(i) கூட்டுத்தாபனம் ஈடுபட்டவாறிருக்கும் நிர்மாண வேலைகளது (ongoing Constructions) வருமானம், கிரயம் மற்றும் இலாபம் என்பன முடிவுறு சதவீத அடிப்படையில் (Stage of Completion) இனங்காணப்பட்டுள்ளதாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தபோதும், ஒப்பந்த வருமானம், கிரயம், இலாபம் என்பன நியமத்தில் குறிப்பிடப்பட்டவாறு இனங்காணப்பட்டிருக்கவில்லை. சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலைகளுக்குச் செலவாகிய கிரயத்தை அதனோடு தொடர்புடைய வருமானத்துடனும் செலவுடனும் சீராக்கல் செய்யக்கூடியவாறு இனங் காணாமையால் ஒரே சீரான அடிப்படையில் வருமானத்தை இனங்காண முடியாதிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டின்போது 17 நிர்மாண வேலை ஒப்பந்தங்களில் இனங் காணப்பட்டிருந்த இலாபமானது பெருமளவு மாற்றத்திற்குள்ளாகியிருந்தது.

(ii) மீளாய்வாண்டு முடிவிலான ரூபா 2,798.60 மில்லியன் நிர்மாண வேலை ஒப்பந்தங்களில் முடிவடையாத வேலைகளின் முடிவடைந்த சதவீதமும் இனங்காணப்பட்ட வருமானமும் தொடர்பான விபரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 627.74 மில்லியன் அரசாங்க மானியம் வழங்கப்படுகையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளும் எதிர்பாரா நிகழ்வுகள் தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு காணிச் சுவீகரிப்பு தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு எதிராகத் தனி நபர்கள் 12 வழக்குகளைத் தொடுத்திருந்தனர். இதனால் விளையக்கூடிய ரூபா 74.31 மில்லியன் எதிர்பாராப் பொறுப்புகள் கணிப்பிடப்பட்டு நியமத்தின் பிரகாரம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38**

நியமத்தினது 118 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான உணரக்கூடிய சொத்துக்கள், அதாவது கணனி மென் பொருட்கள் வேறாக இனங்காணப்பட்டிராததுடன், நிதிசார் கூற்றுக்களில் அது தொடர்பாகப் போதியளவு வெளிப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நியமத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் சொத்துக்கள் (Financial Assets) வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நிதிச் சொத்தாக இனங்காணப்பட வேண்டிய கடன்பட்டோரினது நட்டக்கடன் பெறுமதியை நோக்காகக் கொண்ட சான்றின் (Objective Evidence) அடிப்படையில் இனங்காணப்பட்டு யதார்த்தபூர்வமான பெறுமதியை நிதிக்கூற்றில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது ஓராண்டிற்கு மேற்பட்ட சகல கடன்பட்டோருக்கும் 100 சதவீத நட்டக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 520.89 மில்லியன் முதலீட்டுச் சொத்துக்களுக்குரிய கொள்கை வெளிப்படுத்தப்படவில்லை. அச்சொத்துக்களது நியாயமான பெறுமதியைக் கணிப்பிட்டு அதனை நிதிக்கூற்றில் காட்டவில்லை. அவ்வாறே, கூட்டுத்தாபனம் வாடகை அடிப்படையில் வெளி நபர்களுக்கு வழங்கிய காணி, முதலீட்டுச் சொத்தாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டிராததுடன் அக்காணிகளது பெறுமதி தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேறஸ் கங்கை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்றிருந்த நெடுங்காலக் கடனைப் பயன்படுத்தி அச்செயற்திட்டத்திற்கெனக் கொள்வனவு செய்திருந்த ரூபா 35.18 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களது பெறுமதியை மானியமாகக் கருதி பிற்போட்ட வருமானக் கணக்கில் (Deferred Income) அது சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, இச்சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களது மீளாய்வாண்டிற்குரிய தேய்மானப் பெறுமதியான ரூபா 7.92 மில்லியன் செயற்பாடு அல்லாத வருமானமாகக் காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் அதேயளவு அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாரிய கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் பெற்றிருந்த 03 இயந்திரங்களது பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(இ) தொடர்புடைய மீதிகளது தன்மையை பகுப்பாய்வு செய்யாது வேலை முடிவடைந்த செயற்திட்டங்களில் உருவாகியிருந்த சொத்துக்கள் குறித்த சொத்துக்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக அச்சொத்துக்களுக்குச் செலவழிக்கப்பட்ட ரூபா 779.63 மில்லியன் மற்றுமொறு நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அப்பெறுமதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சொத்துக்களது பெறுமதி நிதிசார் கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பாரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 660 மில்லியன் மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் முன்னைய ஆண்டிலிருந்து 03 ஆண்டுகளுக்குள் காலக்கழிவுக் (Amortization) குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு முடிவளவில் இவ்வாறாகப் பதிவழிக்க வேண்டிய ரூபா 220.24 மில்லியன் பிற்போட்ட வருமானமாக (Deferred Income) நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்குப் பதிலாக விசேட செயற்திட்டப் பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) பெல்லன்வில சிற்றுண்டிச்சாலைக்கு மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 38,497,957 பெறுமதியான சமையலறை உபகரணங்கள் நிலையான சொத்தாகக் கணக்கிலிடப்படுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. இதன் காரணமாக, நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அதேயளவு பெறுமதியாலும் அதற்குரிய தேய்மானம் குறைவாகக் கணிப்பிடப்பட்டுமிருந்தது.

(ஊ) வேறஸ் கங்கை செயற்திட்டம் தொடர்பாகப் பெறப்பட்ட கடனில் மீளாய்வாண்டின்போது பல்வேறு விழாக்களுக்கு ரூபா 2.60 மில்லியன் செலவிடப்பட்டு வேறஸ் கங்கை செயற்திட்டத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(எ) நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 2,798.60 மில்லியன் முடிவடையாத செயற்திட்டம் விற்பனைக் கையிருப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக, நடைமுறைச் சொத்துக்கள் அதேயளவு தொகையால் அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தன.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 230.20 மில்லியனாகும். எனினும், பட்டோலையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 234.08 மில்லியன் ஆகியமையால ரூபா 3.88 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை விற்பனைப் பல்கூட்டுத்தொகுதி நிர்மாண வேலைச் செயற்திட்டத்திற்குக் கூட்டுத்தாபனம் ரூபா 23,035,752 செலவழித்திருந்தது. எனினும், குறித்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அச்செலவு ரூபா 12,570,000 மாத்திரமே ஆனதால் ரூபா 10,465,752 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இனங்காணப்படக்கூடிய பணிக்கொடைத் தேறிய மிகை ரூபா 17,537,551 ஆகும். எனினும், மதிப்பீட்டாளரின் பணிக்கொடைப் பொறுப்பின் நியாயமான மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 17,967,426 ஆகும்.

(ஈ) நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் சுட்டிக் காட்டப்பட்ட 02 விடயங்களது மீதி அதனோடொத்த விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட மீதி என்பவற்றுடன் இணக்கஞ் செய்யப்பட்டபோது ரூபா 10,573,117 வேறுபாடு அவதானிக்கப்பட்டபோதும், குறித்த வேறுபாட்டிற்கான காரணம் குறித்துக் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவிலிருந்த ரூபா 556 மில்லியன் கடன்பட்டோர் மீதியினுள் 2 முதல் 5 ஆண்டுகளாக நிலுவையாக உள்ள ரூபா 86 மில்லியன் கடன் மீதியும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையான ரூபா 18 மில்லியன் கடன் மீதியும் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) தியன உயன புகையிரத சிற்றுண்டிச்சாலை நிர்மாண வேலை தொடர்பாக இலங்கை இராணுவத்திற்கு வழங்கிய முற்பணத்தில் ரூபா 11,576,801 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த வேலை முடிவுற்று ஓராண்டிற்கு மேலாகியும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. அவ்வாறே, இம் முற்பணப் பிணை முறி பெறப்பட்டிருக்கவுமில்லை.

(இ) மீளாய்வாண்டினது முடிவளவில் கொலன்னாவையிலும் சாலமுல்லையிலும் 216 வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் (ஏ கட்டிடம்) முடிவடைந்து ஓராண்டாகியும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 160.76 மில்லியன் மற்றும் நிறுத்தி வைத்த தொகையாகிய ரூபா 25.92 மில்லியன் என்பவற்றைக் கூட்டுத்தாபனம் அறவிடத் தவறியிருந்தது.

(ஈ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொலன்னாவையிலும் சாலமுல்லையிலும் நிர்மாணித்த 792 வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் விலைப்பட்டியல் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக (பீ மற்றும் சீ கட்டிடங்கள்) சேவை வழங்குநரது பரிசீலனை அறிக்கையைக் கோரும் விண்ணப்பத்தை கூட்டுத்தாபனம் வழங்கத் தவறியமையால் கூட்டுத்தாபனம் பெற வேண்டிய முறையே ரூபா 65.16 மில்லியன் மற்றும் நிறுத்தி வைத்த தொகையாகிய ரூபா 25.14 மில்லியன் என்பவற்றைப் பெறுவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் சேவை நாடுநர் கொடுப்பனவு செய்திருந்த வேலை ஆரம்பிக்கப்படுவதற்கான ரூபா 359.02 மில்லியன் (Mobilization Advance) திருப்பிக் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கையையும் கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) 2012 நவம்பர் 28 ஆந் திகதியன்று இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனியிடமிருந்து கடன் அடிப்படையில் பெறப்பட்ட ரூபா 3,000,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பொருட்டுக் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை மீளாய்வாண்டு முடிவளவிலும் கொடுப்பனவு செய்யப்படாதிருந்தது.

(ஊ) 1978 தொடக்கம் மீளாய்வாண்டு முடிவு வரை காணி விற்பனை தொடர்பாகக் கூட்டுத்தாபனம் காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய அபிவிருத்தி செய்யப்படாத காணியினது பெறுமதியாகிய ரூபா 60.37 மில்லியனைக் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி அபிவிருத்தியின் பொருட்டு வெளி நபர்களிடமிருந்து கூட்டுத்தாபனம் பெற்றிருந்த ரூபா 502 மில்லியன் காணி விற்பனை வைப்புத் தொகையில் ரூபா 489 மில்லியன் 05 ஆண்டுகளுக்கு மேலாக தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ஏ) முத்துராஜவெலயில் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமாகவிருந்த காணியிலிருந்து ஒப்பந்தகாரர் அகழ்ந்து எடுத்த மணலின் பொருட்டும் அக்காணியைப் பயன்படுத்தியதன் பொருட்டும் முறையே ரூபா 180 மில்லியன் மற்றும் ரூபா 171 மில்லியன் எனக் கூட்டுத்தாபனத்தால் அறவிடப்பட வேண்டியிருந்தும், 05 ஆண்டுகளாக அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஐ) 2011 முதல் வெளி நாட்டுக் கம்பனி ஒன்றிற்குக் கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டியிருந்த 575,000 யூரோவைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாகவும் காலப்பகுதியின்போது ஏற்பட்ட சாதகமற்ற அந்நியச் செலாவணி வேறுபாடுகளாலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 90.48 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டம் | |
| (i) 2(ஆ) 1 ஆம் பிரிவு | தீவடங்கிலும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள தாழ்ந்த நிலத்தில் நீரைக் கொண்டிருக்கும் காணிகள், ஊற்றுக்கள் அல்லது சேற்றுக் காணிகளை இனங்கண்டு அத்துமீறிய காணி நிரப்புதலைக் கட்டுப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் இயலுமானவாறு அவற்றை வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பிரசித்தப்படுத்துவதும் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு அவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட மாகாணங்களது எண்ணிக்கையின் வரம்பு 04 க்கு உட்பட்டிருந்தது. |
| (ii) 8(அ) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மீட்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமெனச் சுவீகரிக்கப்படும் காணிகள், கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு, கைத்தொழில், வணிக மற்றும் விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு செப்பனிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறாக 1995 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்ட 284 ஏக்கர் முதுன் எல முத்துராஜவெல மற்றும் காணிகளில் 84 ஏக்கர் அதாவது 30 சதவீதமான குறைந்த அளவே செப்பனிடப்பட்டிருந்தன. |
| (ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11(ஆ) பிரிவு | நிதி அமைச்சரது இசைவின்றி பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் ரூபா 1,279.66 மில்லியன் நிலையான மற்றும் குறுகிய கால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சபை (திருத்த) அதிகாரச் சட்டத்தின் 8 ஏ பிரிவு | குறித்த உள்ளூராட்சி நிறுவகத்தினது அங்கீகாரமின்றிப் புதிய தலைமை அலுவலகக் கட்டிடத் தொகுதியைக் கூட்டுத்தாபனம் நிர்மாணித்திருந்தது. இதன் காரணமாக, எதிர்வரும் ஆண்டுகளில் அங்கீகாரம் பெறப்படுவதற்கான ரூபா 12,014,540 பொறுப்பு உருவாகியிருந்தது. |
| (ஈ) | 2015 திசெம்பர் 09 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது பரிந்துரையுடன் மீளாய்வாண்டின்போது ஊழியர் ஒருவருக்கு ரூபா 13,500 வீதம் ஊக்குவிப்புப் படியாக ரூபா 18,372,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 1993 நவெம்பர் 26 ஆந் தகிதிய 794/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | கூட்டுத்தாபனம் அகழ்ந்தெடுத்த 4,478.679 கியூபிக் மீட்டர் கடல் மணலுக்கு ரூபா 135.45 அரசிறையாக வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த அரசிறை ரூபா 10 மில்லியன் மாத்திரமே. |
| (ஊ) | 2003 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 8.3.8 ஆம் பிரிவு | திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாத்திரமே மீளாய்வாண்டின்போது ரூபா 39.26 மில்லியன் ஊக்குவிப்புப் படியாக வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது தொகுதியினதும் கூட்டுத்தாபனத்தினதும் நட்டம் முறையே ரூபா 91.56 மில்லியன் மற்றும் ரூபா 157.39 மில்லியன் ஆகவிருந்தது. இதற்கெதிரான முன்னைய ஆண்டின் இலாபம் முறையே ரூபா 398.02 மில்லியன் மற்றும் ரூபா 346.685 மில்லியன் என்பனவாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் தொகுதியினதும் கூட்டுத்தாபனத்தினதும் இலாபம் முறையே ரூபா 65.83 மில்லியன் மற்றும் ரூபா586.8 மில்லியன் நலிவினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் வருமானம் ரூபா 876.5 மில்லியன் குறைவடைந்தமையும் விற்பனைச் செலவினம் ரூபா 292.30 மில்லியன் அதிகரித்தமையும் வரிக்கு முன்னரான இந்நிகர இலாப நலிவுக்குப் பிரதான காரணிகளாகின.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டின் ரூபா 287.97 மில்லியன் மிகையானது 2012 ஆம் ஆண்டில் ரூபா 68.17 மில்லியன் நிதிப் பற்றாக்குறை ஆகியிருந்தது. மீண்டும் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 103.89 மில்லியன் மற்றும் ரூபா 346.69 மில்லியன் மிகை ஏற்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின்போது அது ரூபா 157.39 மில்லியன் பற்றாக்குறையாக ஆகியிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், அரசிற்கு வழங்கிய வரி, நடைமுறை அல்லாத சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளுமிடத்து நிறுவனத்தின் பங்களிப்பு 2011 தொடக்கம் சார்பு மிக்க பெறுமதியாகத் தொடர்ந்து அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா 419.32 மில்லியன் ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், மீட்பதற்கும் அபிவிருத்தி செய்யப்படுவதற்குமான பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீட்பதும் அபிவிருத்தி செய்வதும் அக் காணிகள், கட்டிடங்கள் என்பவற்றைக் கைத்தொழில், வணிக அல்லது விவசாய நடவடிக்கைகளுக்கு உகந்தவாறு செய்தலும் அக் காணிகளது பொறுப்புடைமை, முகாமைத்துவம், நிர்வாகம், அக் காணிகளை மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்குட்பட்டு அதற்குப் பொறுப்பாக இருத்தல், பொறியியல் துறை நிர்மாண வேலை நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளைப் பொறுப்பேற்றல், கால்வாய் வழிகளைப் பொறுப்பேற்றல், அபிவிருத்தி, பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் கால்வாய்ப் பாதை மாசு படுவதைத் தவிர்ப்பது என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கமும் பணியுமாகும். இந்நோக்கங்களை ஈடேற்றுவதிலான முன்னேற்றம் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1993 தொடக்கம் 2005 வரையான காலப்பகுதியின்போது பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக 1000 ஏக்கர் சதுப்பு நிலம் சுவீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டு முடிவளவில் அத்துமீறிய காணி மீட்பு மற்றும் அத்துமீறிய நிர்மாண வேலைகள் என்பனவற்றால் அக்காணியின் அளவு 600 ஏக்கர் வரை குறைவடைந்திருந்தது. இது தொடர்பாகக் கூட்டுத்தாபனம் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததுடன், இந் நிலைமையானது வெள்ளத்தால் ஏற்படும் இழப்புகள் அதிகரிப்பதற்கு நேரடித் தாக்கமாக அமைந்துமிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினது முடிவில் உள்ளவாறு கூட்டுத்தாபனமானது 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள நீர் தேங்கும் இடங்களில் அத்துமீறிய நிர்மாண வேலைகளையும் மீட்புகளையும் இனங்கண்டிருந்தபோதும் இவ்வாறு இனங்காணப்பட்ட நிர்மாணிப்புகளை அகற்றுவதற்குப் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தின் நிர்மாணப் பிரிவு மீளாய்வாண்டில் மேற்கொண்ட 09 வெளிவாரி ஒப்பந்தங்களில் 05 நட்டத்திற்குள்ளாகின. ஏற்பட்ட திரண்ட நட்டம் ரூபா 20.60 மில்லியன் ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் இயந்திர உபகரணப் பிரிவின் வருமானம் ரூபா 251.78 மில்லியனாகும். எனினும், அப்பிரிவின் பராமரிப்புச் செலவினம் மற்றும் ஊழியர் செலவினம் என்பன அதிகரித்தமையால் மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்டிருந்த திரண்ட நட்டம் ரூபா 125.13 மில்லியன் ஆகும்.

(உ) கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டு அமுலாக்கப்பட்ட 09 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 42.45 மில்லியன் செலவாகியதையடுத்து சேவை வழங்குநரது கோரிக்கைக்கு அமைய மீளாய்வாண்டின்போது வேலை இடை நிறுத்தப்பட்டிருந்தது. செலவாகிய தொகையை அறவிடுவது நிச்சயமற்றதாகியிருந்தது.

(ஊ) முத்துராஜவெல நீர்க் காணிகள் தொடர்பாக நீர்க் காணிகளுக்கான முகாமைத்துவத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்குப் பொதுத் திறைசேரி மீளாய்வாண்டின்போது ரூபா 2,000,000 ஒதுக்கீடு செய்திருந்தபோதும், 2016 நவெம்பரிலும் இத்திட்டம் தயாரிக்கப்படாதிருந்தது.

(எ) கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின்போது ரூபா 1.325 மில்லியனிலான 14 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்குத் திட்டமிட்டபோதும், அச் செயற்திட்டங்களை அமுல்படுத்தாது செயல் நடவடிக்கைத் திட்டத்திவ் உள்ளடங்காத 23 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது செலவழித்திருந்த தொகை ரூபா 266.98 மில்லியன் ஆகும்.

(ஏ) மீளாய்வாண்டினது முடிவளவில் தியன உயன பப் (PUB) கூடத்தை நிர்மாணிப்பதற்கென ரூபா 14,615,535 செலவழிக்கப்பட்டிருந்தது. அதன் செயல் முன்னேற்றம் 34 சதவீதமாக இருக்கையில் அந்நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்தது. வேலையைக் கைவிட்டதற்கான காரணம் கணக்காய்வில் தெளிவுறாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தியன உயன சிற்றுண்டிச் சாலை அமைந்துள்ள காணியின் சட்டபூர்வ உரித்தைச் சுவீகரிப்பதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் காரணமாக, சிற்றுண்டிச் சாலை நடவடிக்கைகள் சம்பந்தமாகக் கூட்டுத்தாபனம் வெளி நபர்களுடன் சட்டபூர்வ உடன்படிக்கைகளில் ஈடுபடுவது பாதிக்கப்பட்டிருந்தது. மேலும், இக்காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபை எதிர்காலத்தில் தனது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் சுவீகரித்துக் கொள்வதற்கான அபாயகரமான நிலை உருவாகியுமிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனம் பிட்டக்கோட்டே 09 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஏறக்குறைய 05 ஏக்கர் காணியில் சிறந்த வீடமைப்புக் கூட்டுத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2007 ஆம் ஆண்டில் அபிவிருத்தியாளர் ஒருவருடன் விற்பனை உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்தது. அது 2010 ஆம் ஆண்டில் முடிவடைய வேண்டியதாகும். இக்காணியை அபிவிருத்தி செய்வதற்கு அபிவிருத்தியாளரிடமிருந்து ரூபா 489 மில்லியன் முற்பணமாகப் பெறப்பட்டிருந்தது. எனினும், 2016 டிசெம்பர் 31 வரை குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமையால் உடன்படிக்கை இரத்தாக்கப்பட்டு முற்பணம் திருப்பி அளிக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், முறையான நிதி முகாமைத்துவமின்றி பணம் பயன்படுத்தப்பட்டமையால் கூட்டுத்தாபனம் வைப்புத் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாத நிதிச் சிக்கலுக்குள்ளாகியிருந்தது.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு வெள்ளைத் தாமரை வீடமைப்புச் செயற்திட்டத்தின் குடியிருப்போரிடமிருந்து பெற வேண்டியிருந்த தவணைப் பணத்தினதும் வட்டியினதும் நிலுவைத் தொகை ரூபா 19.39 மில்லியன் ஆகவிருந்தது. இதனை அறவிடுவதற்கு உடன்படிக்கை நிபந்தனைக்களுக்கமைய கூட்டுத்தாபனம் எதுவித சட்டரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிராததுடன், அத்தொகையில் ரூபா 19.01 மில்லியனுக்கு நட்டங்களுக்கான நிதியேற்பாட்டை மேற்கொண்டுமிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொலன்னாவ சாலமுல்ல வீடமைப்பு நிர்மாண வேலை (ஏபீசீ கட்டிடம்) தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏறக்குறைய 04 ஏக்கர் காணி பயன்படுத்தப்பட்டிருந்தது. அக்காணியினது பெறுமதி ரூபா 171 மில்லியன் ஆகும். அதனை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பாதுகாப்பு இடங்களில் 156 குடும்பங்கள் அத்துமீறிக் குடியேறியிருப்பது இனங் காணப்பட்டிருந்தது. எனினும், அக்குடும்பங்களை அகற்றுவதற்குப் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், சில குடும்பங்கள் 1999 தொடக்கம் அங்கு குடியிருப்பதும் தெரிய வந்தது.

(இ) கூட்டுத்தாபனம் சுவீகரித்திருந்த அத்திடிய மற்றும் முத்துராஜவெல ஆகிய இடங்களில் உள்ள 03 சதுப்பு நிலக் காணிகளில் முறையான பராமரிப்பு இல்லாததால் அக் காணியில் குடியிருப்போர் அத்துமீறிய குடியேற்றவாசிகளா என்பதை இனங்காண முடியாதிருந்தது.

(ஈ) 1981 முதல் 2005 வரையான காலப்பகுதியின்போது கூட்டுத்தாபனம் சுவீகரித்திருந்த காணிகளுக்குரிய இழப்பீட்டை அவ்வப்போது கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் அக்காணிகளுக்கு மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 166.95 மில்லியன் ஆகியிருந்தது. அதற்கான வட்டி ரூபா 98.50 மில்லியன் ஆகும். இது கொடுப்பனவு செய்ய வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் 59 சதவீதமாகும். குறித்த இழப்பீட்டுத் தொகையை வழங்குவது துரிதப்படுத்தப்பட்டு வட்டி செலுத்துவதைக் குறைத்துக் கொள்ளும் விதத்தில் பிரதேச செயலகங்களுடன் சிறப்பாக ஒத்துழைக்காமையால் இந்நிலை உருவாகியிருந்தது. காணிச் சுவீகரிப்பிற்கு 11 முதல் 35 ஆண்டுகள் கடந்திருந்தமையால் காணிகளில் அத்துமீறிக் குடியிருப்போர் வசிப்பதும் மேலும் தெரிய வந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) கூட்டுத்தாபனத்தினது நோக்கங்களுக்கு முரணாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் முன்னாள் அரசியல்வாதி ஒருவரின் ஞாபகார்த்த பழம் பொருள் காட்சியகத்துடன் கூடிய நினைவுச் சின்னம் ஒன்றை அம்மாவட்டத்தில் அமைப்பது தொடர்பாகக் கூட்டுத்தாபனம் அறவிட வேண்டியிருந்த ரூபா 56.31 மில்லியன் பிரபல்யமான கலைஞர்களது பல்வேறு நிகழ்ச்சிகளினூடாகச் சேகரிக்கப்பட வேண்டியபோதும், மீளாய்வாண்டு முடிவளவிலும் அவ்வாறாகப் பணம் சேகரிக்கப்படவில்லை.

(ii) அத்தொகைக்குப் புறம்பாக, கூட்டுத்தாபனம் நிர்மாணப் பணிகளுக்கான பொருட்களைப் பெறுவதற்கு இலங்கை கடற்படைக்கு ரூபா 25 மில்லியன் முற்பணமாக வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவளவிலும் அம் முற்பணம் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ஆ) 1993 மார்ச் 31 ஆந் திகதிய அமப/93/340/041 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி கொழும்பு 05, எவ்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள 3.05 பர்ச்சஸ் காணியானது 1993 ஜுன் 21 ஆந் திகதிய 73 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் மூலம் 99 ஆண்டு காலக் குத்தகைக்கு நபர் ஒருவருக்கு ரூபா 152,000 காணிப் பெறுமதியுடனும் வருடாந்தம் பெயரளவுக் குத்தகையாக ரூபா 305 செலுத்தப்படும் அடிப்படையிலும் கூட்டுத்தாபனத்தால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் தெரிய வந்தன.

(i) 2008 மார்ச் 28 ஆந் திகதியன்று குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து அத் தினத்தில் உள்ளவாறு எஞ்சியிருந்த 84 ஆண்டுகளுக்குப் புதிய உடன்படிக்கையின் கீழ் தனியார் கம்பனி ஒன்றிற்கு மீண்டும் குத்தகை வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய ஏற்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து அமைச்சரவைத் தீர்மானமின்றி பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி புதிய உடன்படிக்கையில் கூட்டுத்தாபனம் ஈடுபட்டிருந்தது. அவ்வாறே, மூல உடன்படிக்கையின் (iii) ஆம் பிரிவின் பிரகாரம் 99 ஆண்டு காலக் குத்தகையின் பின்னர் மாத்திரமே குத்தகையாளர் அல்லது உரித்தாளரின் பொருட்டு குத்தகைக் காலத்தைத் திருத்தஞ் செய்ய முடியுமெனினும், அப் பிரிவு மீறப்பட்டிருந்தது.

(ii) மூல உடன்படிக்கையின் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது குத்தகை உடன்படிக்கையில் ஈடுபடும்போது காணியை மீண்டும் மதிப்பீடு செய்யாது மூல உடன்படிக்கைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு உடன்படிக்கை செய்து கொண்டமையால் கூட்டுத்தாபனத்திற்குப் பெருமளவு இழப்பு ஏற்பட்டிருந்தது.

(iii) 2010 யூன் 30 ஆந் திகதியன்று இரண்டாவது குத்தகையாளர் தன்னிடத்தே உள்ள சகல குத்தகை உடன்படிக்கை மூலமும் தனக்குரித்தாகும் அதிகாரத்தை உப குத்தகையாளர் ஒருவருக்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கியிருக்க, மீண்டும் உப குத்தகை வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் உடன்படிக்கையில் இல்லாதிருந்தும் 2016 ஆம் ஆண்டிலும் 03 ஆண்டுகளுக்கு அக் காணியை மீண்டும் வேறொரு தனியார் கம்பனிக்கு உப குத்தகைக்கு வழங்குவதற்கான இரண்டாவது குத்தகையாளரின் வேண்டுகோளுக்குக் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்தது.

(iv) உப குத்தகை வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் அதற்குரிய நிர்வாகக் கட்டணமாகக் கூட்டுத்தாபனத்தால் காணியினது பெறுமதி 25 சதவீதம் வரை குறைத்துக் கொள்ளப்படுவதால் அறவிடப்படும் நிர்வாகக் கட்டணம் மிகவும் குறைந்த பெறுமதியுடையதாக இருந்தது. பெறுமதிக் குறைப்பிற்கான காரணம் என்னவென்பதைக் கணக்காய்வில் உணர முடியாதிருந்தது.

(இ) உலக வங்கியின் உதவியுடன் அமுலாகும் கொழும்பு நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பாக மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் செலவழித்திருந்த ரூபா 41.01 மில்லியன் செயற்றிட்டச் செலவினத்திற்கான மீளளிப்பைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 4.5 குறைபாடுகளாகத் தோற்றுபவை

மீளாய்வாண்டினது முடிவளவில் ஹோட்டல் கம்பனி ஒன்றிலிருந்து கூட்டுத்தாபனம் பெற்றிருந்த சேவைகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 3,439,282 ஆகும். இது கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. பெறப்பட்ட சேவையினது விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தில் சட்டப் பிரிவு ஒன்றிருந்தபோதும், வெளிவாரி சட்டத்தரணி ஒருவருக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 1,143,630 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.7 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது முடிவளவில் தியன உயன சிற்றுண்டிச் சாலையினது நிர்மாண வேலை முடிவடைவதற்கு ஓராண்டிற்கு மேலாகியிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் ஏறக்குறைய 42 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 52,691,701 ஆகவிருந்தது.

(ஆ) கொலொன்னாவ, சாலமுல்லவில் 792 வீடுகளை அமைக்கும் (கட்டிடங்கள் பீமற்றும் சீ) ஒப்பந்தத்தில் செய்த வேலைகளது பெறுமதி 653.02 மில்லியன் ஆகவிருந்தது. சான்றுறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 281.34 மில்லியன் ஆகும். எஞ்சிய வேலைகளது பெறுமதியாகிய ரூபா 371.68 மில்லியன் ஓராண்டிற்கு மேலாகியும் சான்றுறுதிப்படுத்தப்படாதிருந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டளவில் ஒப்பந்தத்தின் உருப்படி முன்னேற்றம் 19 சதவீதமாக இருந்ததால் தொழிலை வழங்கியவரால் ஒப்பந்தம் மீளப் பெறப்பட்டு தனியார் நிர்மாணத்துறை கம்பனி ஒன்றிடம் அவ்வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிய ரூபா 157.72 மில்லியன் பெறுமதியான எஹலியகொடை விளையாட்டு மைதான நிர்மாண ஒப்பந்த வேலை 2015 ஆம் ஆண்டில் முடிவடைய வேண்டுமாயினும், சேவை வழங்குநர் பணம் செலுத்தாமையால் மீளாய்வாண்டினது முடிவளவில் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத்தினத்தில் உள்ளவாறு நிர்மாண வேலையினது நிதிசார், உருப்படி முன்னேற்றம் என்பன முறையே 35 சதவீதம், 34 சதவீதம் என்பனவாகும்.

(ஈ) மீளாய்வாண்டில் வேலையை நிறைவு செய்ய வேண்டிய ரூபா 786.92 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்தங்களது மீளாய்வாண்டு முடிவிலான உருப்படி முன்னேற்றம் 1 முதல் 34 சதவீதத்துக்கு உட்பட்ட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டின் ஒக்டோபரில் வேலையை நிறைவு செய்ய வேண்டிய தலவத்துகொடை பல்வகைத் தாவரவியல் கல்விசார் பூங்காவினது வேலை மீளாய்வாண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் முடிவடையாதிருந்தது.

(உ) கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள களஞ்சிய மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய நிர்மாணச் செயற்திட்டத்திற்கு மனையியல் மற்றும் வியூக அடிப்படையிலான திட்டத்தைத் தயாரிப்பதற்கென பொறியியல் மதிப்பீடின்றி மீளாய்வாண்டினது முடிவளவில் ரூபா 11.27 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) ஒப்பந்தங்கள் சம்பந்தமான செயல் முன்னேற்றம் நலிவடைந்ததன் காரணமாக தொழிலை வழங்கியவரால் மீண்டும் பொறுப்பேற்கப்பட்ட 2 செயற்திட்டங்களால் மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட திரண்ட நட்டம் ரூபா 14.10 மில்லியனாகும்.

(எ) கொலன்னாவ சாலமுல்லவில் 216 வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் (ஏ கட்டிடம்) மதிப்பிடப்பட்ட பெறுமதியாகிய ரூபா 516.44 மில்லியனுக்கதிகமாக ரூபா 95.14 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்கான கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆண்டின் ஆரம்பத்தில் கூறு விலைகளைக் கோரி வழங்குநர்களையும் ஒவ்வொரு கட்டிடப் பொருளையும் வழங்க வேண்டிய கூறு விலையையும் தீர்மானித்திருந்ததுடன், மீண்டும் போட்டியுடன் கூடிய கூறு விலைகளைக் கோராது முன்னரே தீர்மானித்த விலையில் மீளாய்வாண்டின்போது ரூபா 3,740,806 க்கான கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தது.

(ஐ) 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 13/1144/503/087 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி வேரஸ்கங்க மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் முன்னேற்றத்திற்கான செயற்திட்டத்தை ஆரம்பித்து அமுல்படுத்துவதற்காக தேசிய சேமிப்பு வங்கி மூலம் திறைசேரியின் பிணையுடன் கடனாக ரூபா 14,227 மில்லியன் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கூட்டுத்தாபனம் 2014 ஜுலை 14 ஆந் திகதியன்று 141 ½ ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தும் இணக்கத்துடன் தேசிய சேமிப்பு வங்கியுடன் கடனுக்கான கணக்கில் ஈடுபட்டது. நுகேகொடை, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, வேரஹெர ஆகிய பிரதேசங்களில் மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல், தற்போதுள்ள கால்வாய்களை விரிவடையச் செய்தல், கால்வாய்க் கரைகளின் பாதுகாப்பு, வெள்ளநீர் தேங்கும் இடங்களைப் பாதுகாத்து குளங்களை நிர்மாணித்தல், புதிய மதகுகளையும் பாலங்களையும் நிர்மாணித்தல் என்பன செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாவதுடன், செயற்திட்டம் 2013 ஒக்டோபர் 04 ஆந் திகதி ஆரம்பமாகி 2018 ஒக்டோபர் 24 வரையான 5 ஆண்டுகளுக்குள் முடிவடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தை ஆரம்பித்து முடிவுறுத்த வேண்டிய காலப்பகுதிக்குள் குறித்த செயற்திட்டத்தை நிறைவேற்றும் விதத்தைக் காட்டும் வண்ணம் நியமங்களை உள்ளடக்கிய காலவரையறைத் திட்டம் (Time Frame) மற்றும் கால்வாய்ப் பாதை, பாலங்கள், மதகுகள், பராமரிப்பு வழிகள், நீர்தேங்கும் பிரதேசங்கள் ஆகியவற்றிற்கென முன்மொழியப்பட்டுள்ள வேலை நிரல் (Work Schedule) என்பன தயாரிக்கப்படாது செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 நவெம்பர் 30 ஆந் திகதியளவில் செயற்திட்டம் 03 ஆண்டுகளுக்கு மேலாகியதால், செயற்திட்டம் முடிவடைய வேண்டிய காலத்துடன் ஒப்பிடப்படும்போது 60 சதவீதம செயல் முன்னேற்றம் அறிவிக்கப்பட வேண்டுமாயினும், அத்தினத்தில் உள்ளவாறான உருப்படி முன்னேற்றம் ஏறக்குறை 23 சதவீதம் எனக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் மூலம் உறுதியாயிற்று. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் அசாதாரண கால தாமதத்தைத் தவிர்த்தவாறு குறித்த காலத்தில் செயற்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான புதிய வேலைத் திட்டத்தை முகாமைத்துவம் அறிமுகஞ் செய்திருக்கவில்லை.

(iii) செயற்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ள இடர் நிலைமையை இனங்காணுதல், அவற்றின் அதி குறைந்த மற்றும் அதி கூடிய அளவுகள் யாவை போன்றனவும் அதன் மூலம் ஏற்படக்கூடிய அபாய நிலைமையையும் இனங்கண்டு கொண்டிருக்கவில்லை.

(iv) செயற்திட்டத்தை அமுல்படுத்துகையில் இனங்கண்டு கொண்டிருந்த வலயங்கள் (ZONE) மற்றும் உப செயற்திட்டங்கள் (PACKAGES) தொடர்பாகத் தயாரிக்க வேண்டிய மாதாந்த, வருடாந்த செயல் முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை.

(v) இச் செயற்திட்டமானது ரூபா 14,227 மில்லியன் கடன் தொகை மூலம் நிதியளிக்கப்பட்டது. இதனை வேறான செயற்திட்டமாகக் கருதி வேறான கணக்கீட்டு முறைமையை செயற்திட்டத்திற்கெனத் தயாரித்து அதனை அமுல்படுத்தியிருக்கவில்லை.

(vi) செயற்திட்டத்திற்குரிய வலய இலக்கங்கள் 1,2,3 கேபியன் அமைப்பு (Gabian Structure) தயாரிக்கப்படுவதற்கு ரூபா 281,461,659 அதி கூடிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான வேலையை ஆரம்பிக்கும் முற்பணம் ஒப்பந்தகாரர்களுக்கு அதிகளவில் வழங்கப்பட்டிருந்தது.

(vii) ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின்படி, கேபியன் அமைப்பை நிறுவுவதற்கு 4X6 அங்குல (100* 1500 mm) கருங்கற்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், அந்த அளவிலான கருங்கற்கள் 25 சதவீதத்திற்கும் குறைவாகவே நிர்மாண வேலைக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனை மூலம் தெரியவந்தது. எஞ்சிய 75 சதவீதத்துக்கும் அதிகமான அளவுக்கு 12X16 அங்குல (200* 400 mm) கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இது பிரித்தானிய நியமமான BS 8002.1984 க்கு முரணானதும் ஆகும். இந்நியமத்தின் பிரகாரம் Gabian boxes களுக்குக் கற்களைப் பரவும் போது பயன்படுத்தக்கூடிய கருங்கற்களது அதி கூடிய அளவு 200mm ஆகும். இந்நிலைமையின் கீழ் Gabian boxes களுக்குள் அவ்வாறான பெரிய கற்களைப் பரவுவதன் மூலம் பாதிப்பு ஏற்படக்கூடும். அத்துடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கேற்ப இவ்வமைப்பு நிமாணிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(viii) வலய இலக்கம் 1 இன் 2889 மீட்டர் நீளமான பகுதியினது கால்வாய்ப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கான வேலை 34 ஆம் உப செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 34 ஆம் உப செயற்திட்டத்தின பகுதிக்கான ஒதுக்கீடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 54 மீட்டர், 68 மீட்டர், 100 மீட்டர், 110 மீட்டர் என மிகச் சிறிய அளவில் மொத்த ஒப்பந்தமும் வெவ்வேறாக்கப்படுவதற்கான காரணத்தைக் கணக்காய்வில் உணர முடியாதிருந்தது.'

- இந்நிலைமையின் கீழ் 2,889 மீட்டர் நீளக் கால்வாய்ப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கு 3 மொழிகளிலும் தினப் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு பெருமளவு கிரயம் செலவாகியிருந்தது. அவ்வாறே, இச்சகல ஒப்பந்தங்களுக்கும் சுகாதார நடவடிக்கைகளுக்கான கழிவறைகளை அலுவலகங்களை நிர்மாணித்தல், நிர்மாணித்தல், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஏற்பாடு செய்தல் போன்றவற்றிற்கு ரூபா 1 மில்லியனுக்கு அதிகமான ஆரம்பச் செலவினம் Preliminaries மதிப்பிடப்பட்டு கொடுப்பனவிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ix) உப ஒப்பந்தகாரர்களுக்கு வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக (Mobilization) ரூபா 341,077,366 வழங்கப்பட்டிருந்தது. 2016 நவெம்பர் 16 ஆந் திகதியளவில் தாமதக் காலம் 02 ஆண்டுகளுக்கு மேலான முற்பணத்தையும் உள்ளடக்கிய தீர்து வைக்கப்படாத முற்பண மீதி ரூபா 161,767,969 ஆகவிருந்தது. இதற்கமைய, செயற்திட்டம் கடன் மூலம் பெறப்பட்ட பணத்தை முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு வழங்கியதன் மூலம் அவர்களிடையே பணமானது அசாதாரண காலத்திற்குக் கையிலிருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(x) செயற்திட்டத்திற்கெனப் பெறப்பட்ட கடன் குறித்த நோக்கங்களுக்கு அப்பால் முதலீடு செய்யப்பட்டு கூட்டுத்தாபனம் வட்டியைச் சம்பாதிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 647 மில்லியன் மீளக் கொள்வனவுக் கட்டளைகளில் (REPO) முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(xi) செயற்திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 1,000 ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு காணிச் சுவீகரிப்பினது முன்னேற்றம் திட்டமிடப்பட்ட அளவின் 10 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. அவ்வாறே, இழப்பீடு வழங்கப்பட்ட காணிகளது உரித்தைக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(xii) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு செயற்திட்டத்தின் பொருட்டு ரூபா 3,111 மில்லியன் முதலிடு செய்யப்பட்டபோதும், பெறப்பட்ட வங்கிக் கடன் ரூபா 2,550 மில்லியனாக மாத்திரமே இருந்தது. இதற்கமைய, பெறப்பட்ட கடன் தொகையிலும் கூடுதலாக ரூபா 561 மில்லியன் செயற்திட்டத்திற்கெனப் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடனுக்கு அதிகமாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் சம்பந்தமான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.8 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபன வளங்கள்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் விதிகளுக்கு முரணாக மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனப் பதவியணியினரில் 04 பேர் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களது சம்பளமும் படியுமாகிய ரூபா 1.8 மில்லியனைக் கூட்டுத்தாபனமே செலவிட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் 03 வாகனங்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

## 4.9 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 1,720 ஆகும். அத்திகதியில் உள்ளவாறான பதவியணியினரது எண்ணிக்கை 1,411 ஆகும். ஒவ்வொரு பதவிக்குமேற்பக் கூட்டுத்தாபனப் பதவியணியில் 368 வெற்றிடங்களும் 59 மிகையும் நிலவின.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பிரதான பதவியாகிய பிரதிப் பொது முகாமையாளர் (இயந்திர உபகரணங்கள்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. பிரதிப் பொது முகாமையாளர் (திட்டமிடலும் வர்த்தக அபிவிருத்தியும்) பதவி வெற்றிடமாக இருந்தது.

## 4.10 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தால் இலங்கை காணி மீட்பு (தனியார்) கம்பனிக்குக் குத்தகையாக வழங்கப்பட்டிருந்த கட்டிடத்திற்கும் பிரிவுக்குமென 2005 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை மதிப்பீடு செய்யப்படாமையால் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய தற்போதைய வாடகை வருமானம் இழப்பிற்குள்ளாகியிருந்தது.

(ஆ) தியன உயன வளாகத்திற்கு 2014 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.58 மில்லியன் பெறுமதியுடைய 100 காய்கறித் தட்டுகள் பயன்படுத்தப்படாது கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதலாகக் களஞ்சியத்தில் துருப்பிடித்தவாறிருந்தன.

## 4.11 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 867,000 கிரயமுடைய அசைவற்ற கையிருப்பு மீதியும் ரூபா 123.2 மில்லியன் பெறுமதியான மெதுவாக நகரும் கையிருப்பு மீதியும் இருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் சாலமுல்ல வீடமைப்பு திட்ட ஒப்பந்தத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10.36 மில்லியன் பெறுமதியான 02 நீர் விசிறும் இயந்திரங்கள் (Hoist) மற்றும் ரூபா 40.32 மில்லியன் பெறுமதியான பலகைகள் (Scaffolding props) மற்றும் பீ.ஐ குழாய்கள் என்பன 2014 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாதிருந்தன. மழை பெய்கையில் நனையாது இருப்பதற்குப் போதிய பாதுகாப்பின்றி அவை பழுதடைந்தவாறிருந்தன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உட்சேர்க்கப்பட வேண்டிய நிறுவனத்தின் தற்போதைய வளங்கள், கடந்த 03 ஆண்டுகளது செயற்பாட்டுப் பெறுபேற்று முன்னேற்றம் போன்ற தகவல்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ரூபா 12.290 மில்லியன் பெறுமதியான செயற்திட்டங்கள் யாவை என்பதை முகாமைத்துவம் இனங்காணத் தவறியிருந்தது.

(இ) கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பின்வரும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(i) தீவடங்கிலுமான தாழ்ந்த சதுப்பு நிலம், வறண்ட அல்லது சேறு நிறைந்த காணிகளை இனங்கண்டு அத்துமீறிய காணி மீட்புகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை மேற்பார்வையிடுவதற்குமான விதத்தில் வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடுதல்.

(ii) கால்வாய்களை அண்டிய பிரதேசம் கால்வாய் பாதுகாப்புப் பிரதேசமாக இனங் காணப்பட்டு பாதுகாப்பிற்குள்ளான அவ்விடங்களில் தற்காலிக அல்லது வேறெவ்வித நிர்மாண வேலைகளையும் தவிர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரித்தல்.

(ஈ) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட உபாய வழிகளை எய்துவதற்குக் கூட்டுத்தாபனம் போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டிற்கென இனங்காணப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 450 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அது செயற்திட்டத்தின் மொத்தக் கிரயத்தினது 15 சதவீதமாகும். அவ்வாறே, கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பல்வேறு செயற்திட்டங்கள் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்துடன் இசைவுறும் விதத்தை தொடர்புபடுத்திக் காட்டியிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------

முகாமைத்துவம் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய துறைகளின் வழிகாட்டியாக உள்ளகக் கணக்காய்வு பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், பெருமளவு பரிணாமமுடைய நிர்மாண வேலை ஒப்பந்தக் கூட்டுத்தாபனத்தினது பணிகள் விரிவடையும் அதே சந்தர்ப்பத்தில் அர்த்தமுடைய பெறுபேறுகளை அடைவதற்கேற்றவாறு உள்ளகக் கணக்காய்வுப் பதவியணியைச் சக்தி மிக்கதாக்க கூட்டுத்தாபனம் போதிய கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் செயல் முன்னேற்றம் பகுப்பாய்வு செய்யப்படுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளவாறான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடுகையில் 75 முதல் 144 சதவீதம் வரையிலான இடைவெளியுடனான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதன் மூலம் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தல்

--------------------------------------------------------------------------

2003 ஜூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனம் தனது ஆண்டறிக்கையை நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன் வைக்க வேண்டுமாயினும், 2014 ஆம் ஆண்டிற்கான அறிக்கையைக் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டு முடிவளவிலும் பாராளுமன்றத்தில் முன் வைத்திருக்கவில்லை.

## 5.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

--------------------------------------------------------------

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் மீளாய்வாண்டு முடிவளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(அ) குறித்த பொறுப்புடைய நபர்களின் அங்கீகாரமின்றி பதவியணியினருக்குத் தொடர்ச்சியாகத் தொழில்சார் படிகளை வழங்குதல்.

(ஆ) உத்தியோகத்தர்களின் வாகனக் கடனகளுக்கு அறவிடப்படும் வட்டி தொடர்ச்சியாக மீளளிக்கப்படுதல்.

(இ) கூட்டுத்தாபனம் ரூபா 30.2 மில்லியன் கிரயத்தில் அபிவிருத்தி செய்த 3.5 ஏக்கர் காணியில் பிரதேச செயலாளரின் ஒத்துழைப்புடன் கோவில் ஒன்றை அமைத்த நபர்களுக்கு எதிராகத் துரித சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 2012 நவெம்பர் 30 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழு பணிப்புரை விடுத்திருந்தது. எவ்வாறாயினும், குறித்த பணிப்புரையை அமுலாக்குவதற்குக் கூட்டுத்தாபனம் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

(ஈ) ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையைக் கணிப்பிடும்போது குறித்த அதிகாரச் சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட படிகள் மற்றும் ஏனைய ஊதியம் என்பவற்றைக் கணிப்பிலிடாமை.

**5.6 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்.**

தீவடங்கிலுமான அத்துமீறிய காணி மீட்பின் மூலம் அநேக சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் உருவாகியிருந்ததுடன், அது எதிர்காலப் பரம்பரையினரையும் பாதிக்குமாதலால் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவ்வாறான காணி மீட்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கூட்டுத்தாபனம் தனக்குள்ள அதிகாரத்தைப் போதியளவு பயன்படுத்தவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|
| (அ) ஒப்பந்த நிர்வாகம் | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் அமுலாக்கப்படாமை, ஒப்பந்தங்களது செயல் முன்னேற்றம் குறைந்த மட்டத்திலமைந்திருந்தமை என்பவற்றால் தொழில் வழங்குநரால் சில ஒப்பந்தங்கள் நிறுத்தப்பட்டமையும் நிர்மாண வேலைகள் நியமங்களுக்கேற்ப நடைபெறாமையும். |
| (ஆ) பொருட் கொள்வனவு நடைமுறை | (i) போட்டி ஏற்படும் விதத்தில் கூறு விலைகளைக் கோராது முன்னரே தீர்மானிக்கப்பட்ட விலையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டமை. |
| | (ii) காணிகளது தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி கணிப்பிடப்படாது சில காணிகள் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வழங்கப்பட்டமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதி முகாமைத்துவம் | (i) | குறித்த பணி முடிவுற்றதும் முற்பணத்தையும் அபிவிருத்தியாளரிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகையையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை, கடன் உடன்படிக்கைப் பிரகாரம் கடன் தவணைத் தொகையையும் வட்டியையும் அவ்வப்போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை என்பன. |
| | | (ii) | உடன்படிக்கைப் பிரகாரம் குத்தகை வாடகையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளாமை |
| | | (iii) | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்குமெனப் பெறப்பட்ட அரசாங்க மானியத்தை நோக்கத்திற்குப் புறம்பாக பயன்படுத்தியமை |
| (ஈ) | கணக்கீடு | (i) | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பலவற்றிற்கு ஒவ்வாத விதத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. |
| | | (ii) | நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புகளும் பிழையின்றி இனங்காணப்பட்டுக் கணக்கிலிடப்படாமையால் அவற்றினது பெறுமதி அதிகமாகவும் குறைவாகவும் கணிப்பிடப்பட்டிருந்தமை. |